Vijey විජය

# விஜய்

28.06.2017 - மலர் 14, இதழ் 18

# நூலகங்களின் பணிகள்...

ஒக்டோபரில் பூமியில் மோதுமா நிபிரு கிரகம்?

கைவிரல் பதிவிலான கிரெடிட் கார்ட்

எகிப்திய இளவரசியின் மம்மி கண்டுபிடிப்பு

விலை ரூபா 15/-





மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை


ISSN 1391-9504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் துறையில் பெயர்பெற்ற பெல்

இலங்கையில் தொல்லியல் ஆராய்ச்சியில் மகத்தான சேவைகளை ஆற்றிய ஒருவராக எச்.சி.பி. பெல் (Harry Charles Purvis Bell) கருதப்படுகின்றார். இவர், 1851இல் இந்தியாவில் பிறந்தார். கல்வி கற்பதற்காக இங்கிலாந்துக்கு சென்ற பெல், உயர் கல்வியினை நிறைவு செய்யும் வரை அங்கேயே தங்கியிருந்தார். அதன் பின்னர் இலங்கையின் நிர்வாகப் பரீட்சையில் சித்தி பெற்ற இவர், 1873 ஜூலை 10ஆம் திகதி முதலாவது நியமனத்தைப் பெற்று கண்டி செயலகத்திற்கு வருகை தந்தார். இவ்வாறுதான் பெல்லின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது. அப்பொழுது அவருக்கு வயது 22 ஆகும்.





## கேகாலை அரிக்கை

1888இல் கேகாலை மாவட்ட ஆளுநராக நியமிக்கப்பட்ட பெல், பின்னர் கேகாலை நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து, கேகாலை தொடர்பான பழங்கால நூல்கள், கல்வெட்டுக்கள், சுவடிகள் ஆகியவற்றை கற்றுணர்ந்து கேகாலை அறிக்கையினை எழுதினார்.



## தொல்லியல் ஆணையாளராக பதவியேற்பு

தொல்லியல் ஆணையாளராக பெல் பதவியேற்ற பின்னர், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடிபாடுகளைப் பாதுகாப்பதற்காக, ஆளுநருடாக சில சட்டதிட்டங்களை நிறைவேற்றினார். அத்துடன், அனுராதபுரத்திலுள்ள இடிபாடுகள் குறித்து பல அகழ்வாராய்ச்சிகளை ஆரம்பித்தார். 1900 வரை சுமார் 10 ஆண்டுகளாக அப்பகுதிகளில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டார்.

இந்த அகழ்வாராய்ச்சிகளுக்கு இடையில் விஜயாராமய, கிரிபத்வெஹெர, ஜேதவனாராமய, தெமள மகா சேய, அபயகிரி, பன்குளிய, தொலுவில, மயுரபாத பிரிவெனா, சேல சைத்திய, தூபாராமய, ருவன்வெலி சேய, புளியங்குளம் ஆகிய பகுதிகளில் பல்வேறு அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு இடிபாடுகளை கண்டுபிடித்தார்.

## சீகிரியாவில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வுப் பணிகள்

1895இல் சீகிரியாவில் மேற்கொண்ட சிற்சில கண்டுபிடிப்புகள் பெல்லின் சேவைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் முக்கியமான கண்டுபிடிப்புகளாக கருதப்படுகின்றன. ஏணி போன்ற ஓர் அமைப்பை நிர்மாணித்து அதனைப் பயன்படுத்தி சீகிரியா குன்றின் ஓவியங்களைப் புனரமைத்தார். சீகிரியா அகழ்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து சான்றுகளையும் கொழும்பு ஆசிய சங்கத்தின் கூட்டங்களின்போது பெல் சமர்ப்பித்திருந்தார்.

## ஆணையாளர் பதவியிலிருந்து விடைபெறல்

1912இல் இவர் தொல்லியல் ஆணையாளர் பதவியிலிருந்து விடைபெற்றார். எனினும், தொல்லியல் ஆய்வுத் துறையில் இவருக்கு இருந்த பேரார்வம் காரணமாக, தொல்லியல் சார்ந்த கட்டுரைகளையும் அறிக்கைகளையும் அவர் தொடர்ச்சியாக எழுதி வந்தார். இவரின் 'The Maldive Island' என்ற நூல் மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

## இறுதிக் காலம்

1937ஆம் ஆண்டு செப்டெம்பர் 6ஆம் திகதி பெல் இயற்கை எய்தினார். எனினும் தொல்லியல் துறையில் இவர் ஆற்றிய பணிகள் இன்றும் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வகித்த பதவிகள்

- ⋆ 1880 இல் கொழும்பு ரோயல் ஆசிய சங்கத்தின் கௌரவ உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.
- ⋆ 1888 இல் கேகாலை மாவட்ட ஆளுநராக பதவி வகித்தார்.
- ⋆ 1890-1912 வரை தொல்லியல் ஆணையாளராக பதவி வகித்தார்.
- ⋆ 1903இல் வெஸ்ட் ரிஜ்வே ஆளுநரினால் முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டார்.

# திராட்சை

பண்டைய காலத்தில் கிரேக்கர்களும் ரோமானியர்களும் திராட்சை பழச் செய்கையை பாரியளவில் மேற்கொண்டுள்ளனர். எனினும், இன்றளவில் சீனா, இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகளே திராட்சை உற்பத்தியில் முன்னணியில் உள்ளன.

திராட்சைப் பழத்தில் நீர், மாச்சத்து, கொழுப்பு, தாதுப்பொருட்கள் மற்றும் விற்றமின்களும் அடங்கியுள்ளன. இந்தப் பழங்களிலிருந்து ஜேம், பழரசம், வினாகிரி, உலர் திராட்சை, வைன், திராட்சை விதை எண்ணெய் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன. திராட்சைப் பழங்கள் உடலின் உட்புறத்தை சுத்தப்படுத்தி, உடலிலுள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்ற உதவுகின்றன இதனால், தோல் சுருக்கம், நோய்த் தொற்றுக்கள் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது. திராட்சைப் பழங்கள் தாகத்தைப் போக்கும் தன்மை கொண்டவை. இவை தவிர; புற்றுநோயை தடுத்தல், உயர் குருதி அழுத்தத்தைக் குறைத்தல் போன்ற ஆற்றல்களும் திராட்சைக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர அனுமதிக்கு கட்டணம் வசூலிப்பு...?

கா.பொ.த. (உ/தர) கற்றலுக்கு தகுதிபெறும் மாணவர்களிடம் உயர்தர வகுப்பிற்கென விசேட அனுமதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக, சில தேசிய பாடசாலை அதிபர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டு தொடர்பில் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்துத் தெரிவிக்கையில், சில அதிபர்மார் தமது பாடசாலையில் கற்கின்ற மாணவர்களிடம்கூட உயர்தர வகுப்பிற்கு அனுமதிக் கட்டணம் வசூலிப்பதாகவும், மேலும் பிற பாடசாலைகளிலிருந்து அனுமதி கோரும் மாணவர்களிடமும் கட்டணம் வசூலிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். கல்வித்துறை அமைச்சு இது குறித்து உரிய நடவடிக்கையை எடுக்கத் தவறியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.




வெல்லுங்கள்

மாதம் ஒரு சைக்கிள்!

14 ஆம் வருடத்தை முன்னிட்டு



சேகரித்த ஜூன் மாத கூப்பன்களை தபாலிடுங்கள்

விஜய்

**நீங்கள் செய்ய வேண்டியது**

இந்த மாதத்திற்கான விஜய் பத்திரிகைகளில் வெளிவருகின்ற 'மாதம் ஒரு சைக்கிள்' கூப்பன்களை சேகரித்து அவற்றை ஒன்றிணைத்து மாத இறுதியில் எமக்கு தபாலிடுங்கள். குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு வெற்றிப் பரிசாக சைக்கிள் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

மாதம் ஒரு சைக்கிள்
'விஜய்'
த.பெ.இல-2037
கொழும்பு

**விஜய் மாதம் ஒரு சைக்கிள்**

மாதம்: ஜூன்
திகதி: 28.06.2017

பெயர் : ..............................
ஆண்/பெண் : ..............................
முகவரி : ..............................
..............................
தொ.பே.இல : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................

பரிசை நேரில் பெற்றுக்கொள்வேன் என உறுதிப்படுத்துகிறேன்

..............................
கையொப்பம்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது



விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


# மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் விரைவில் மருத்துவ பீடமொன்று ஏற்படுத்தப்படவிருப்பதாக பல்கலைக்கழக அனுமதி ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, மொரட்டுவை பல்கலைக்கழகம் முன்வைத்திருந்த திட்ட வரைபிற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். எனவே, இதற்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆரம்ப கட்டமாக 100 மாணவர்கள் இப்பிரிவிற்கு



அனுமதிக்கப்படவிருப்பதாகவும், இவர்களில் மருத்துவத் துறைக்கு தகுதி பெறுகின்றவர்கள் களுபோவில போதனா மருத்துவமனையில் பணிக்கு அமர்த்தப்படுவர் எனவும் தெரியவருகின்றது.




## சிறந்த பாடசாலை சஞ்சிகை தெரிவுப் போட்டி

அச்சு ஊடக அனுசரணை விஜய்

பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை, திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த பாடசாலை சஞ்சிகையை தெரிவு செய்யும் போட்டி.....

### போட்டி விதிமுறைகள்

இந்தப் போட்டியில் எந்தவொரு பாடசாலையும் கலந்து கொள்ளமுடியும். 2017 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இப்போட்டிக்கென முன்னெடுக்கமுடியும். மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளது. மொத்தமுள்ள 25 மாவட்டங்களிலும் முதல் இடத்தைப் பெற்ற 25 சஞ்சிகைகளுள் முதல் மூன்று இடத்தைப் பெறும் சஞ்சிகைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தேசிய மட்டப் போட்டியில் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் உரிய சஞ்சிகையும் எமக்கு அனுப்பப்படல்வேண்டும்.

### நிபந்தனைகள்

01. பாடசாலை மட்டத்தில் இப்போட்டியில் பங்குபற்றமுடியும்.
02. மாணவர்களின் சஞ்சிகையை சமர்ப்பிக்க முடியும்.
03. ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இதற்கென சமர்ப்பிக்க முடியும்.
04. கையெழுத்துப் பிரதி வடிவிலான சஞ்சிகைகளையும் சமர்ப்பிக்கமுடியும்.
05. உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ உள்ள கலாசாரப் பிரிவு உத்தியோகத்தரிடம் கையளிக்க முடியும்.
06. போட்டி முடிவுத் திகதி 2017 ஒக்டோபர் 15



இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்ட பாடசாலை சஞ்சிகைப் போட்டி
மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முதலெழுத்துகளுடன் பெயர்:..................
02. பாடசாலை :..................
03. பாடசாலை முகவரி :..................
04. பாடசாலை தொலைபேசி :..................
05. மாவட்டம் :..................
06. பிரதேச செயலகம் :..................
07. சஞ்சிகையின் பெயர் :..................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையெனவும் சரியானவை எனவும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................. ..................................
மாணவர் பெயர் கையொப்பம்

எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சஞ்சிகையுடனான போட்டி விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

அதிபரின் பெயர்:..................................
கையொப்பம் :..................
(பதவி முத்திரை) :.................. திகதி:..................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாவட்ட நிலை அரச கலை இலக்கிய விழாவையொட்டிய கதைப் போட்டியில் முதலாம் இடத்தை வென்ற கதை

# சித்தப்பா தந்த பரிசு

இன்னும் பத்து நாட்களே இருக்கின்றன மதுராவின் பத்தாவது பிறந்த தினத்திற்கு. அவள் தனது பிறந்தநாளை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதோடு, தனது தோழிகளிற்கும் தனது பத்தாவது பிறந்த தினத்தை குதூகலத்துடன் கொண்டாட இருப்பது பற்றி பெருமிதத்துடன் கூறிக்கொண்டாள்.

ஓமான் நாட்டில் பொறியியலாளராக வேலை பார்க்கும் மதுராவின் சித்தப்பா குமார் கடந்த வாரம் தொலைபேசியில் கதைத்தபோது, மதுராவின் பிறந்ததினக் கொண்டாட்ட காலத்தில் தான் இலங்கை வரவுள்ளதாகவும், வரும்போது பிறந்ததினத்திற்கு சிறப்பான பரிசும் வழங்கவுள்ளதாகவும் கூறியிருந்தார்.

இது அவளது பத்தாவது பிறந்த தினமாகவும் அவளின்மீது பாசங் கொண்ட சித்தப்பா இப்பிறந்த தினத்திற்கு வருகை தரவிருப்பதாலும் கடந்த ஆண்டுகளில் கொண்டாடப்பட்ட பிறந்த தினங்களைவிட, சிறப்பாக இந்தப் பிறந்ததினத்தை கொண்டாட வேண்டுமெனவும் மதுராவின் குடும்பத்தினரும் திட்டமிட்டிருந்தனர். மதுராவின் மனமோ சித்தப்பா வழங்கவுள்ள சிறப்புப் பரிசுப் பொருள் எது? என்பது தொடர்பில் கனவு கண்டபடியே இருந்தது. இந்த ஒரு வாரகாலமும் ஓடிக்கழிந்தது.

இதற்கு முன் மதுராவின் எட்டாவது பிறந்த தினத்திற்கு ஓமானிலிருந்து ஹஜ் பெருநாள் விடுமுறைக்கு இலங்கை வந்த சித்தப்பா பிறந்தநாள் பரிசாக சிறிய இரண்டு சில்லு துவிச்சக்கர வண்டியொன்றைப் பரிசாக வழங்கியிருந்தார். அந்த துவிச்சக்கர வண்டியை மதுரா இப்பொழுதெல்லாம் விளையாடப் பாவிப்பதில்லை. காரணம் அவள் அதனைப் பயன்படுத்தும் நிலையைவிட வளர்ச்சியடைந்திருந்தாள். அந்த துவிச்சக்கர வண்டியை அவள் ஒன்றரை வருடங்கள் உற்ற நண்பனைப் போலவே பாவித்து வந்தாள்.

நாட்கள் வேகமாக நகரவே அவளது பிறந்ததினமும் வந்தது. அன்றைய தினம் சனிக்கிழமையாக இருந்தபோதும் அவள் அதிகாலையிலேயே எழுந்து தாய், தந்தை, பாட்டன், பாட்டியை வணங்கி ஆசி பெற்றதுடன், மாலை நடைபெற இருக்கும் விருந்துக்கான ஆயத்த செயலிலும் ஈடுபட்டாள்.



கண்மூடி விழிக்கும் நேரத்திற்குள் அன்றைய மாலைப் பொழுதும் வந்தது. இப்போது விருந்தினர்கள் குழுவாகவும், குடும்பமாகவும் வந்துகொண்டிருந்தனர். இவ்வாறு வந்தவர்களில் ஒருவராக மதுராவின் சித்தப்பாவும் வந்திருந்தார்.

சரியாக மாலை 3.30 மணிக்கு மதுரா கேக்கை வெட்டிக் கொண்டாட்டத்தை ஆரம்பித்தாள். இவ்விழாவிற்கு வந்த பலரும் அவளிற்கு கேக்கை ஊட்டியதோடு, பரிசுப் பொருட்களையும் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தனர். சித்தப்பாவும், அப்பம்மாவும் வாழ்த்துத் தெரிவிப்பதற்காக பிறந்த நாள் கொண்டாட்ட மேசை அருகே வந்தனர். அப்பம்மா அழகான பொம்மையொன்றை பரிசாகக் கொடுப்பதற்கு வைத்திருந்தார்.

ஆனால், சித்தப்பா கையில் மட்டும் எந்த ஒரு பரிசுப்பொருளும் இல்லாதிருந்தது. இதனால், மதுராவின் மனமோ சித்தப்பா தொலைபேசியில் கூறியபடி எந்த விஷேட பரிசுப்பொருளும் கொண்டுவரவில்லையே என எண்ணி மனம் புழுங்கினாள்.

இதனிடையே அப்பம்மா "உனக்கு சித்தப்பாவின் பரிசுப்பொருள் வீட்டின் பின்புறம் உள்ளது" எனக் கூறினார். மதுராவின் மனமோ சித்தப்பா பரிசுப்பொருளை ஏன் வீட்டின் பின்புறத்தில் வைக்க வேண்டும்? என வினாவிய வண்ணம் இருந்தது. இதற்கிடையே முதல் நாள் வெள்ளிக்கிழமை மதுரா பாடசாலையில் இருக்கும்போது வீட்டுக்கு வந்த சித்தப்பா வீட்டின் பின்புறம் மூன்று குழிகளை வெட்டியிருந்தார். இதனை பிறந்தநாள் கொண்டாட்ட ஆயத்தப்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்ட மதுரா அவதானிக்கவில்லை.

நேரம் மாலை 5.30 ஆகியது. பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றுச் சென்றனர். இறுதியில் சித்தப்பா, அப்பம்மா என ஒரு சிலரே எஞ்சியிருந்தனர். அப்பொழுது சித்தப்பா மதுராவை அழைத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் சென்றார். அங்கு அவளுக்காக அவர் கொண்டு வந்த பரிசுப் பொருளும் இருந்தது. அப்பரிசுப் பொருள் பொலித்தீன் பை நாற்றுச் சாடியில் உற்பத்தி செய்யப்பட்டு நன்கு செழித்து வளர்ந்திருந்த உயர் இனப் பப்பாசி நாற்றுக்கள் மூன்று ஆகும். மதுராவிற்கோ இப்பரிசுப்பொருள் மீது சிறிதளவும் விருப்பமில்லை. ஆனாலும், சித்தப்பாவின் மனம் வருத்தப்படாதிருப்பதற்காக அவள் போலிச் சிரிப்புடன் சித்தப்பாவை நோக்கி புன்முறுவல் செய்தாள்.

> சிறப்பாக இந்தப் பிறந்ததினத்தை கொண்டாட வேண்டுமெனவும் மதுராவின் குடும்பத்தினரும் திட்டமிட்டிருந்தனர். மதுராவின் மனமோ சித்தப்பா வழங்கவுள்ள சிறப்புப் பரிசுப்பொருள் எது? என்பது தொடர்பில் கனவு கண்டபடியே இருந்தது.

சித்தப்பா ஏற்கனவே தயாரித்திருந்த நடுகைக் குழிகள் மூன்றினுள்ளும் மூன்று பப்பாசி நாற்றுக்களையும் மதுராவைக் கொண்டே நடுகை செய்தார். அதன்பின் இந்த நாற்றை எவ்வாறு பராமரிக்க வேண்டுமென்பதையும் அவளுக்கும் அவள் தங்கை ரூபிகாவிற்கும் எடுத்துக்கூறினார்.

அன்று அவளிற்கு கிடைத்த எல்லாப் பரிசுப் பொருட்களினால் அவள் மகிழ்ந்திருந்தபோதும், சித்தப்பா வழங்கிய பரிசுப் பொருளை பராமரிக்க வேண்டிய தேவையுண்டு என எண்ணி மனவேதனையும் அடைந்தாள்.எனினும், தங்கை ரூபிகாவின் உதவியுடன் இம் மூன்று நாற்றுக்களையும் மதுரா கண்ணும் கருத்துமாக பராமரித்து வந்தாள். கன்றுகள் செழிப்புடன் வளர்ந்து ஆறு மாதமளவில் கனிகளைப் பறிக்கக் கூடியதாக வளர்ந்திருந்தது.

அன்று ஒரு நாள் பாடசாலை விட்டு வந்த மதுரா ஒரு பப்பாசிப்பழம் சிறிது செம்மஞ்சள் நிறமாக மாறியிருப்பதை அவதானித்தாள். அதனை தன் தந்தையின் உதவியுடன் பறித்து களஞ்சிய அறையில் பக்குவமாக வைத்தாள். இப்பழம் மூன்று தினங்களின் பின் பூரண செம்மஞ்சள் நிறமாக மாறியதுடன், இனிமையான வாசனையும் வீசியது.

அன்றைய மதிய உணவின் பின் வீட்டிலுள்ள அனைவருக்கும் மதுரா பப்பாசிப்பழத்தை வெட்டி துண்டுகளாக்கி மகிழ்வுடன் பரிமாறினாள். வீட்டிலுள்ள அனைவரும் மதுராவால் வழங்கப்பட்ட பழத்துண்டுகளை மகிழ்வுடன் உண்டு மகிழ்ந்தனர். சித்தப்பா வழங்கிய பப்பாசி நாற்றுக்கள் உயர் ரகத்தைச் சேர்ந்தவையாதலால் வாரத்திற்கு மூன்று பழங்களைத் தரக் கூடியதாக இருந்தது.

எல்லோரும் பிறந்தநாளில் மட்டுமே பரிசு தந்த னர். ஆனால், சித்தப்பா தந்த பரிசோ வாராவாரம் பரிசு கொடுப்பதால் அந்த இல்லமே ஆனந்தம் கொண்டது. இப்பொழு தெல்லாம் யாருக்காவது பரிசுப் பொருள் கொடுப்பதென்றால், மதுரா மரக்கன்று ஒன்றையே பரிசாக வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளாள்.

ப.அருந்தவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்திய இளவரசியின் 'மம்மி' கண்டுபிடிப்பு

**எகிப்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் அண்மையில் எகிப்திய இளவரசி ஒருவரின் கல்லறையை கண்டுபிடித்துள்ளனர். இந்த இளவரசி அடக்கம் செய்யப்பட்ட கல்லறையானது 3,700 வருடங்கள் பழமை வாய்ந்தது என எகிப்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.**

## புதியதோர் கண்டுபிடிப்பு

எகிப்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் மிகப் பழமையான மன்னர் ஒருவரின் கல்லறையில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தனர். மன்னரின் கல்லறை அமைந்திருந்த இடத்திற்கு அருகில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் விளைவாகவே, குறித்த இளவரசியின் கல்லறையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மன்னரின் கல்லறை கண்டுபடிக்கப்பட்டதை விட இளவரசியின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என எகிப்திய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ் இளவரசி 13 ஆவது எம்னி கமாவி மன்னரின் மகள் என அனுமானிக்கப்படுகிறது. எம்னிகாவ் மன்னரின்




பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையுடன் கூடிய பிரமிட் ஆனது, இளவரசியின் கல்லறை அமைந்துள்ள இடத்திலிருந்து 600 மீற்றர் தூரத்திலேயே அமைந்துள்ளது.

## மரப்பெட்டி

கல்லறைக்குள் இருந்து மரப்பெட்டி ஒன்றை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர். இது ஹைரோக்லிப்ஸ் எனும் உருவ எழுத்துக்களால் உருவாக்கப்பட்டிருந்தது. இளவரசியின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது சவப் பெட்டி வடிவிலான இந்த மரப் பெட்டியில்தான் என்று எகிப்திய மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த மரப்பெட்டியைச் சுற்றி நான்கு பெரிய ஜாடிகளும் இருந்துள்ளன. அந்த ஜாடிகளில் மம்மியாக்கப்பட்ட இளவரசியின் அவயங்கள் இருந்ததாக கூறப்படுகின்றது.

## எகிப்தின் கதை



இற்றைக்கு சுமார் 7000 வருடங்களுக்கு முன்பே எகிப்தில் முதலாவது குடியேற்றம் உருவாகியது. மிகத் தொன்மையான காலத்தில் தோன்றிய இக்குடியேற்ற மானது, காலப்போக்கில்





பல சிறிய குடியேற்றங்களாகப் பெருகி அவை அனைத்தும் ஒன்றிணைந்து இரு இராசதானிகளாயின. நைல் நதிக் கழிமுகத்தில் கீழ்ப்பகுதியில் ஒரு இராசதானியும் உருவானதோடு, எகிப்தின் மேற்பகுதியில் நைல் நதிப் பள்ளத்தாக்கில் இரண்டாவது இராசதானியும் உருவானது. கி.மு. 3100 ஆம் ஆண்டில் மேல் எகிப்தின் ஆட்சியாளராக மெளஸ் மன்னன் விளங்கினார். கி.மு. 3150 ஆம் ஆண்டில் இம் மன்னர் இரு இராசதானிகளையும் ஒன்றிணைத்து தனது தலைநகராக மெம்பிஸ்வலை உருவாக்கினார். எகிப்தில் எகிப்திய மன்னரின் முதலாவது அரச வம்சம் அதன்பின்பே தோன்றியது.

மன்னரை மக்கள் ஹோரஸ் எனும் கடவுளின் மனித ஆன்மீக அவதாரம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே வழிபட்டனர். கி.மு. 1554 முதல் மன்னர் கௌரவப் பெயரால் அழைக்கப்பட்டார். 'பர் சூ' என்பதே அப் பெயராகும். அரச பரம்பரை கலப்பின்றி தூய்மையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அரச குடும்ப உறவுகளுக்கிடையேதான் திருமணங்கள் நிகழ்ந்தன.

## மத நம்பிக்கை

புராதன எகிப்திய மக்கள் மரணத்தால் தோன்றும் ஆத்மா குறித்து தீவிரமாக விசுவாசம் கொண்டிருந்தனர். யாராவது ஒரு நபர் இறந்த பின் அந்த நபரின் ஆன்மா 'டு அட்' எனும் நரகத்தை நோக்கிப் பயணிப்பதாக அவர்கள் நம்புகின்றனர். அடுத்த பிறப்பில் வெற்றிகரமான வாழ்க்கையுடன் கூடிய நல்ல பிறப்புக் கிடைக்க வேண்டுமாயின் பல தடைகளை அங்கு உடைத்தெறிய நேரிடும் எனவும் நம்பினர். இத் தடைகளிலேயே மிகவும் கடினமான தடையை மரண தேவதையான ஒசைரஸ்ஸின் மண்டபத்தில் சந்திக்க நேரிடும். மரணித்த நபரின் இதயத்தின் நிறை அங்கு நிறுத்துப் பார்க்கப்படும் என மாயக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.



இவர்களில் பாவங்கள் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்களின் இதயமானது, பாரம் கூடியதாக இருக்கும். அப்படியாயின் அத்தகையோர் நகரத்தில் இருக்கும் சிங்கத்திற்கு உணவாக்கப்படுவர். நல்ல மனிதர்களாக இருந்திருப்பின் மறு உலகிற்கு செல்ல அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அந்த மறு உலகத்தை 'மேற்கு இராசதானி' என அழைக்கின்றனர்.


(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மனிதனை வளப்படுத்தும்

வாசிப்பு அறிவினை வளர்க்கும் நோக்குடன் நூல்களை இரவல் கொடுத்தல் மற்றும் வாசிப்பதற்கான இதர வகை நூல்களை தேடி வாசிக்கத் துடிப்பவர்களுக்கான தேவையை பூர்த்திசெய்யும் ஒரு களஞ்சியசாலையே நூலகங்களாகும். புத்தகங்கள், வார-மாத சஞ்சிகைகள், பத்திரிகைகள், கைந்நூல்கள், திரைப்படங்கள், ஓவியங்கள், புட வரைபுகள், அச்சு ஆவணங்கள், சி.டிக்கள், கெசற்கள், வீடியோ பிரதிகள், டிவிடி, புளு ரே, ஈ புக் ஆகியவற்றை இந்த நூலகங்களில் பெற முடியும். மேலும் நவீன காலத்தில் நூலகங்கள் என்பது அத்தியவசிய விடயமாகியுள்ளது. ஏனெனில் மக்களின் வாசிப்பு மற்றும் எழுத்தறிவினை வளர்ப்பதற்கு அனைத்து மட்டங்களிலும் நூலகங்கள் அவசியமாகும்.










## நூலகத்தின் வரலாறு


களி மண் தகடு ஆவணங்களைக் கொண்ட நூலகங்கள் கி.பி.3 ஆயிரம் ஆண்டளவில் பண்டைய மொசப்பத் தேமியா நாகரிகக் காலப்பகுதியில் காணப்பட்டுள்ளது. எகிப்தின் நைல் நதி நாகரிக காலத்தின்போது, பெப்பிரஸ் தாள்களில் தயாரிக்கப்பட்ட நூல்களும் நூலகங்களில் காணப்பட்டுள்ளன. கடதாசி மற்றும் அச்சு முறையினைக் கண்டுபிடித்த சீனாவிலும், இந்தியாவிலும் இவ்வாறு பாரியளவிலான நூலகங்கள் இயங்கியுள்ளன.




## நூலகத்தின் பிரிவு

பிரதான நூலகங்களில் பின்வரும் பிரிவுகளைக் காண முடியும்.

- ★ ஆராய்ச்சிப் பிரிவு
- ★ கட்புலன் செவிப்புலன் பிரிவு
- ★ விசேட சேகரிப்பு பிரிவு
- ★ நூல் கட்டும் பிரிவு
- ★ வெளியீட்டுப் பிரிவு
- ★ வார சஞ்சிகைப் பிரிவு
- ★ அரிய நூல்கள் பிரிவு
- ★ கைந்நூல் பிரிவு
- ★ விநியோகப் பிரிவு



## பலதரப்பட்ட நூலகங்கள்

நூலகங்களின் உரிமை, சேவை மற்றும் சேகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நூலகங்கள் அமைந்துள்ளன. அவ்வாறான நூலகங்கள் சிலவற்றினை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

### 🕮 பொதுமக்கள் நூலகம்

இது உள்ளூராட்சி மன்றங்களினால் நடத்தப்படுகிறது. இதன்மூலம் இப்பிரதேச மக்களுக்கு சேவைகள் வழங்கப்படும்.

### 🕮 பாடசாலை நூலகம்

இவை பாடசாலைகளினால் நடாத்தப்படுவதாகும். அந்தந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டும் சேவையாற்றுகின்றது.

### 🕮 விசேட நூலகங்கள்

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தினால் அல்லது அமைப்பினால் விசேட குறிக்கோளுக்காக நடத்தப்படும் நூலகமாக இவ்வாறான நூலகங்களைக் குறிப்பிட முடியும். உதாரணமாக, அகலவத்த இறப்பர் ஆராய்ச்சி நூலகம், விவசாய நடவடிக்கைகள் ஆய்வு நிலைய நூலகம், தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலைய நூலகம் ஆகியவற்றினைக் குறிப்பிட முடியும். தற்போது இலங்கையில் இவ்வாறான நூலகங்கள் 67 உள்ளன. இவற்றுள் 47 நூலகங்கள் கொழும்பு மற்றும் கொழும்பினை அண்டிய பகுதிகளில் உள்ளன விசேட ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கே இந்நூலகங்களில் அங்கத்துவம் வழங்கப்படும்.

### 🕮 நிறுவன நூலகங்க

திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சேவையாற்ற இங்கு நூலகங்க அமைக்கப்படுகின்றன.

### 🕮 பல்கலைக்கழக நூலகங்க

பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கல்வி சார் உறுப்பினர்களுக்கும் அனைத் பல்கலைக்கழகங்களிலும் நூலகங்கள் நடத்தப்படுகின்றன

### 🕮 தேசிய நூலகம்

நாட்டின் பிரதான நூலகமாக தேசிய நூலகம் இயங்குகின்றது. வெளியிடப்படும் அனைத்து நூல்களினதும் பிரதிகள் தேசிய நூலகத்திற்கு உத்தியோகபூர்வம கிடைக்கும். ஆய்வுக் விசாரணைகளுக்கும் இங்கு உறுப்பினர்களுக்கு அனுமதி அளிக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

## வாசகர் உறுப்பினர் சட்ட திட்டங்

அனைத்து நூலகங்களிலும் வாசக சட்டதிட்டங்கள் உள்ளடக்கப்பட்டு முக்கியமான சட்ட திட்டங்கள் பின்

- 🕮 அமைதியைப் பேணுதல்
- 🕮 கற்றல் பிரிவுக்குள் மட்டு களை எடுத்துச் செல்ல
- 🕮 உணவுகள் பானங்களு இல்லை.
- 🕮 வெளியில் எடுத்துச் செ புத்தகங்களை பாதுகாப்
- 🕮 எடுத்துச் செல்லும் புத்த நாளில் மீள ஒப்படை
- 🕮 தொற்று நோய்கள் இரு பிரவேசிக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நூலகங்கள்'



யாழ். பொது நூலகம்

## நூலக புத்தகங்களின் வகைப்படுத்தல்

டியூ தசம புள்ளி முறையே உலகெங்கும் நூல்களை வகைப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. 1876இல் இந்த முறையினை அமெரிக்காவினைச் சேர்ந்த மெல்வில் டியூ உருவாக்கினார். அவர் நூலக புத்தகங்களை வகைப்படுத்துவதற்கு 0 முதல் 9 வரையான அரேபிய இலக்கங்களைப் பயன்படுத்தினார். இதன்படி, அனைத்து நூல்களும் இந்த இலக்கங்களின் கீழ் பத்தியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- 000 சாதாரண நூல்கள்
- 200 மத நூல்கள்
- 300 சமூக விஞ்ஞானம்
- 400 மொழி
- 500 தூய விஞ்ஞானம்
- 600 தொழில்நுட்ப விஞ்ஞானம்
- 700 கலை
- 800 இலக்கியம்
- 900 வரலாறு மற்றும் சுயசரிதைகள்

இதன்படி, ஒரு பிரிவுக்குள் மீண்டும் 10 உப பிரிவுகள் உள்ளன. இவ்வாறு மீள வகுப்பதன் மூலம் ஒரு பிரிவுக்குள் அதற்குரிய துறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நூலகத்தில் காட்சிப்படுத்தப்படும். இதன்படி, இலக்கங்கள் இட்டு இறாக்கைகளில் நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் அடுக்கப்படும்.

உதாரணமாக, 300 சமூக விஞ்ஞானப் பிரிவின் கீழ் உப பிரிவுகளை இவ்வாறு குறிப்பிட முடியும்.

- 310 புள்ளிவிபரங்கள்
- 320 அரசியல் விஞ்ஞானம்
- 330 பொருளியல்
- 340 சட்டம்
- 350 அரச நிர்வாகம்
- 360 சமூக நிறுவனங்கள்
- 370 கல்வி
- 380 வணிகம்
- 390 பழக்கவழக்கங்கள் , மக்கள் விருப்பு


இவ்வாறு மீண்டும் மீண்டும் உப பிரிவு களுக்குள் பிரிக்கப்பட்டு இந்த வகைப்படுத்தல் விரிவடைகின்றது. நூலகத்தில் வாசகர்கள் இலகுவாக நூல்களைக் கண்டுபிடிக்க இந்த முறை உதவுகின்றது. மேலும் நூலகத்திற்கு கிடைக்கும் நூல்களை உரிய முறையில் இறாக்கைகளில் அடுக்கவும் நூலகப் பணியாளர்களுக்கு இம்முறை உதவியாக இருக்கின்றது.



### அகராதி விளக்கம்

- Audio Visual - செவிப்புல காட்சி
- Reference - குறிப்பு
- Lending - இரவல்
- Special Collection - விசேட சேகரிப்புகள்
- Book Binding - நூல்களை பிணைத்தல்
- Publication - வெளியீடு
- Periodicals - பருவகால சஞ்சிகைகள்
- Rare Books - அரிய வகை நூல்கள்
- Manuscripts - கையெழுத்துப் பிரதி
- Information - தகவல்

புத்தகங்களை தெரிவு செய்ய இந்த முறையினைப் பயன்படுத்த முடியும். ஒவ்வொரு ஒழுங்கு முறையான நூலகத்திலும் இந்த வகைப்பாடு



கொழும்பு பொது நூலகம்

## நூலக தொழில்

நவீன சமூகத்திற்கு அவசியமானதும் உயர் அங்கீகாரம் கொண்ட பணியாகவும் நூலக பணியினைக் குறிப்பிட முடியும். நூலக உதவியாளராக இணைந்து நூலகராக பதவி உயர்வினைப் படிப்படியாகப் பெறவும் முடியும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நூலகர் கற்கை நெறி முன்னெடுக்கப்படுகின்றது. இதன் முதற் கட்டமாக, சான்றிதழ் கற்கை நெறி முன்னெடுக்கப்படுகின்றது. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர் இந்த ஆரம்ப பாடநெறியினைக் கற்க முடியும். அக்கறை, விருப்பம், அர்ப்பணிப்பு இருப்பின் ஆரம்ப பாடநெறியில் இருந்து நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்திற்கான கலாநிதி பட்டம் வரை கற்க முடியும்.

(-இ)

...களுக்கான
...கள்

...ர்களுக்கான
...ள்ளன. அவற்றுள்
...வருமாறு:

...மே புத்தகங்
...வண்டும்.

...க்கு அனுமதி

...லப்படும்
...து அவசியம்.

...கங்களை உரிய
...த்தல்.

...பின் நூலகத்திற்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## (பகுதி-I)

பெயர்: ................................................


கீழ் காணும் எல்லா வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

★ *01, 02* ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிக.

01. 5 9 13
17 21 ....
.... 33 37

1. 24,27
2. 25,29
3. 25,28

02.





1. 45 2. 90 3. 120

03. Aயிற்கும் Bயிற்கும் மிகப் பொருத்தமான சொற்சோடியைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| மிருகங்கள் | A | நீர்வாழிகள் |
| மான் | கிளி | இறால் |
| எருது | கோழி | B |

1. பிராணிகள், நாய்
2. பறவைகள், குருவி
3. பறவைகள், கணவாய்

04.




நீள்வட்டத்திற்கு மட்டும் உரிய எண்கள் எவை?

1. 5, 7, 3 2. 4,7 3. 5,2

05. பெண்கள் ................................ ஆடை அணிந்து வந்தனர்.

1. வண்ண வண்ண
2. அதிகதிக
3. மணிமணியாய்

06. சிறுவர்கள் ............................ பண்டிகையை கொண்டாடினர்.

1. அனேகர் 2. குதூகலமாக 3. மட்டும்

07. ''நாளைய உலகம் உங்கள் கையில் நன்றாய் உணர்ந்திடுவீர்'' இங்கு நாளைய உலகம் என்பது யாரைக் குறித்து நிற்கிறது?

1. மக்களை 2. குழந்தைகளை 3. சிறுவர்களை

08. 2 3 7
3 □ 7
5 □ 4

வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடை;

1. 2 / 5 2. 4 / 8 3. 3 / 8

09. தரப்பட்டுள்ள சதுரத்தின் நிறந்தீட்டப்பட்டுள்ள நான்கு மூலைகளையும் வெட்டி எடுத்து ஒன்றாக இணைத்தால் பெறப்படும் உருவம் யாது?




1. வட்டம் 2. சதுரம் 3. செவ்வகம்


10. மாலா ஆசிரியரைக் கண்டதும் பணிவுடன் எழுந்து நின்றாள். இங்கு பணிவுடன் என்பது;

1. இரக்கம் 2. அன்புடன் 3. அடக்கம்

11. தரவை அவதானித்து விடை தருக.




1. 1200
2. 1500
3. 1400

12. 

இவ்வுருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?

1. 3 2. 6 3. 1

13. இரண்டாயிரத்து இருபத்தேழு என்பதை இலக்கத்தில் எழுதினால்;

1. 20027 2. 2270 3. 2027

14. பிற்பகல் 6:50 மணியை நியம நேரத்தில் எழுதுக.

1. 18:50 2. 6:50 3. 16:50

15. ஒரு பெரிய கலனில் 10,000 மில்லிலீற்றர் நீர் உள்ளது. அதிலிருந்து 1 போத்தல் 500 மில்லிலீற்றர் கொள்ளக்கூடிய எத்தனை போத்தல்களை அடைக்கலாம்?

1. 10 2. 20 3. 30

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## (பகுதி-II)

(ஜூன் 21 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*06)* *3.* i. x ii. - iii. + iv. -,-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *07)* | *01. 1* | *02. 3* | *03. 4* | *04. 4* | *05. 1* |
| | *06. 1* | *07. 2* | *08. 1* | *09. 4* | *10. 1* |
| | *11. 4* | *12. 1* | *13. 4* | *14. 3* | *15. 4* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிரல் பதிவிலான கிரெடிட் கார்ட்...




## விரைவில் பாவனைக்கு வரவுள்ளது

கைவிரல் அடையாளத்தின்மூலம் உரிமையாளரை உறுதிப்படுத்தக்கூடியவாறான கிரெடிட் கார்ட் முறையினை (Finger Print Credit Card) மார்ஸ்டர் கார்ட் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கிரெடிட் கார்ட்களில் வழமையான 'பின்' (pin) இலக்கத்துடன் உரிமையாளரின் கைவிரல் பதிவும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இன்னொருவரது கிரெடிட் கார்ட்டைக் கொண்டு சூட்சமமாக பணத்தைத் திருடும் திருட்டுப் பேர்வழிகளிடமிருந்து பாவனையாளர்களைக் காக்கும் விதமாகவே இந்த புதிய கைவிரல் பதிவைக் கொண்ட கிரெடிட் கார்ட் அறிமுகமாகியுள்ளது.




இதன் பரீட்சார்த்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளமையால் வெகு விரைவில் இந்த புதுவித கிரெடிட் கார்ட்கள் உலகம் பூராகவும் பாவனைக்கு வரும் என 'மாஸ்டர் கார்ட்' நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போதைய பாவனை முறையின்படி, கிரெடிட் கார்ட் பாவனையாளர் ஒருவர் பணம் பெறும்போது தனது ரகசிய pin இலக்கத்தை அழுத்துவதன் மூலமே பணத்தைப் பெறுபவராக உள்ளது. மேலும், விற்பனை நிலையங்களில் பொருட்களை வாங்கும் போதோ, சேவைகளைப் பெறும்போதோ வெறுமனே கையொப்பத்தை இட்டே தன்னை உறுதிப்படுத்துவதாக இருந்தது. ஆனால், குறித்த புதிய கிரெடிட் கார்ட்டைப் பயன்படுத்தும் ஒருவர் உதாரணத்திற்கு ஒரு விற்பனை நிலையத்தில் பொருட்களை வாங்குவதாயின் விற்பனை நிலைய காசாளர் இவரது கிரெடிட் கார்ட்டை பெற்றுக் கொண்டு தரவுகளை அழுத்துவதுடன், தமது விசேட இயந்திரமொன்றில் பாவனையாளரின் கைவிரல் பதிவையும் பெற்றுக்கொள்வர். இதனையடுத்து அந்த இயந்திரத்தினூடாக, இவர்தான் அந்த கிரெடிட் கார்ட்டின் உரிமையாளர் என்பது உறுதிப்படுத்தப்படும்.



> இன்னொருவரது கிரெடிட் கார்ட்டைக் கொண்டு சூட்சமமாக பணத்தைத் திருடும் திருட்டுப் பேர்வழிகளிடமிருந்து பாவனையாளர்களை காக்கும் விதமாகவே இந்த புதிய கைவிரல் பதிவைக் கொண்ட கிரெடிட் கார்ட் அறிமுகமாகியுள்ளது

இந்த புதிய வழிமுறை பாவனைக்கு வந்தால் கிரெடிட் கார்ட் மூலமான திருட்டு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)

அனுப்ப வேண்டிய முகவரி :
3 பரிசில்கள்
28.06.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 28.06.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ....................
தொ.பே.இல: ..........................
பாடசாலை : ..........................
..................................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 14.06.2017
விடை: சேர்.பிரான்ஸிஸ் மொலமுரே
வெற்றியாளர்:
ஜே.டிஷாந்தன்,
முதலைக்குறி, உயிலங்குளம்,
மன்னார்.

Gift sponsored by:
www.srijob.com







How to ask Questions + Answers
In English
E-Book

ஆங்கிலத்தில் கேள்வி கேட்கும் மற்றும் பதிலளிக்கும் முறைமை அடங்கிய E-Book

ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD


4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருள்



Rs. 8,000 பரிசில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 246



### மேலிருந்து கீழ்

1. காலைச் சூரியன்.
2. தற்பாதுகாப்புக் கலைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
3. சமையலில் சேர்க்கப்படும் இயற்கை சுவையூட்டியொன்று.
5. காலன்.
7. சோறு. (குழம்பியுள்ளது)
8. முறையீடு. (குழம்பியுள்ளது)


### இடமிருந்து வலம்

1. செந்நிறமான கன்னல்.
4. வட்டம் வரையும் கருவி.
6. சேலை கட்டும் முறைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
8. வியாழனுக்கு முன்னைய தினம். (மாறியுள்ளது)
9. தலை. (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி: 245**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | ழை | ப் | பி | 2 த | ழ் |
| க | ■ | பு | ■ | க | ■ |
| வு | ற | 3 உ | ■ | ன | ■ |
| ம் | ■ | ■ | 4 அ | ம் | 5 மை |
| ■ | கு | ■ | ட | ■ | ய |
| ர | 6 வா | ண | ம் | ■ | ம் |


## எழுத்துக்களை ஒழுங்கமைத்து படங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக



- caluclator
- pomcuter
- obok
- nep
- belog
- chira nad sedk
- croscopemi
- tenoobok













## நேரத்தைக் குறிப்பிடுக








## படங்களுக்குரிய சொற்களை தமிழில் தருக







## பொருத்தமற்றதில் 'X' அடையாளமிடுக









## அறிவுக்கு விருந்து (14.06.2017) விடைகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. படத்தில் காணப்படும் பிராணிகளைக் குறிப்பிடுக.

..........................................................................

02. பாட்டியின் மடியில் காணப்படுவது யாது?

1. கிளி 2. பூனை 3. வாத்து




03. இங்கு பச்சை நிறத்தில் காணப்படுபவை;

1. தளபாடங்கள் 2. தரையோடுகள்
3. தாவரங்கள்

04. கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது எது?

........................................



01. பல்வேறு வடிவங்களைக் கொண்டு ஆக்கப் பட்டிருக்கும் இந்த உரு யாது?

..........................................

02. இதில் செட்டைகளை அமைப்பதற்காகப் பயன் படுத்தப்பட்டுள்ள வடிவம் யாது?


..........................................

03. இதன் உடல் பகுதியை வடிவமைக்க .................. .................. பயன்படுத்தப்பட்டுள்ளன.

1. சிறிய செவ்வகங்கள்
2. சிறிய வட்டங்கள்
3. சிறிய சதுரங்கள்

04. இங்கு கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ள வடிவம் யாது?

..........................................






நாம் பாடசாலை .................................. பாடசாலைக்குச் செல்கிறோம்.

- ★ காரிலேயே
- ★ பேருந்திலேயே
- ★ புகையிரதத்திலேயே

வானில் .......................... மிகப் பிரகாசமாக காட்சியளித்தது.

- ★ சந்திரன்
- ★ கோள்
- ★ சூரியன்






ரூபியிடம் நீல நிறத் ........................ ஒன்று உள்ளது.

- ★ தலையணை
- ★ பந்து
- ★ புத்தகம்


கடதாசியை வெட்டுவதற்காக நாம் ........................ பயன்படுத்துகின்றோம்.

- ★ கத்தியை
- ★ கத்தரிக்கோலை
- ★ கோடரியை






**இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4, 5, 6 என இலக்கமிட்டுக் காட்டுக.**




-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரியில்
# திருவள்ளுவர் சிலை பிரதிஷ்டை








கொழும்பு, பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் திருவள்ளுவர் சிலை பிரதிஷ்டை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சபாநாயகர் கருஜயசூரிய, இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து, இந்தியாவிலிருந்து வருகை தந்த வி.ஜி.பி சந்தோசம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டதுடன், இவர்களை அதிபர் கோதை நகுலராஜா அவர்கள் வரவேற்றதுடன் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.





எம். ஹரனி,
காட்மோர் தமிழ் வித்தியாலயம்
மஸ்கெலியா




எஃப்.றிபாதா அசன்,
அல்-அமான் முஸ்லிம் மகா வித்தியாலயம்,
கல்லொழுவை.






செ.விதுர்ஷன்,
ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம்,
ரொக்கத்தனை.

யே.மேவின்,
மமா/கொத்/ இந்துக் கல்லூரி,
இறம்பொடை.



ஆர். ரம்யா
இ/ எம்பி பரியோவான் தமிழ் வித்தியாலயம்
இறக்குவானை



எ.ரஹ்மான்,
கா/உஸ்வதுன் ஹஸனா மகா வித்தியாலயம்,
கட்டுகொடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அழிவுக்கு வழிவகுக்கும் நிபிரு கிரகம்




**உலக அழிவு குறித்து அவ்வப்போது பல்வேறு கருத்துக்கள் வெளிவருகின்றன. அந்தவகையில், 2017 ஆம் ஆண்டில் உலக அழிவு ஏற்படும் என டேவிட் மேட் எனும் வானவியலாளரால் எழுதப்பட்டுள்ள 'ப்ளெனட் எக்ஸ்-2017 எரைவல்' எனும் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**


இவ்வருட இறுதியில் அதாவது, ஒக்டோபர் மாதமளவில் பிரபஞ்சத்தில் மறைந்திருக்கும் கிரகம் ஒன்று புவி இருக்கும் திசையை நோக்கி வந்து புவியுடன் மோதும் என்றும், அதன் மூலம் உலகம் அழிவடையும் என்றும் அவர் அதில் மேலும் கூறியுள்ளார்.

### நிபிரு

மேட் இந்த கிரகத்திற்கு 'நிபிரு' எனப் பெயரிட்டுள்ளார். ஞாயிற்றுத் தொகுதியில் சூரியனைத் தவிர, சூரியனுக்குச் சமனான மற்றொரு நட்சத்திரமும் இருக்கலாம் என மேட் தனது நூலில் மேலும் தெரிவித்துள்ளார். அந்த நட்சத்திரத்தையே நிபிரு எனும் இந்த மர்மக் கிரகம் சுற்றி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிபிரு அதன் நட்சத்திரத்தைச் சுற்றிப் பயணிக்கும்போது அதன் பயணப்பாதை இந்த வருடம் ஒக்டோபர் மாதமளவில் எமது புவியின் பயணப் பாதைக்குள் வருவதனால் அது புவியுடன் மோதும் என்றும் 'ப்ளெனட் எக்ஸ்-2017 எரைவல்' எனும் நூலில் மேட் மேலும் குறிப்பிட்டுள்ளார். நிபிரு கிரகம் புவியைவிட 10 மடங்கு பெரியது என்றும் அது யுரேன்ஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய கிரகங்களுக்கு சமனான தோற்றமுடையது என்றும் கருதப்படுகின்றது.

எனினும், நாஸா உட்பட, உலகின் முன்னணி விஞ்ஞான நிறுவனங்கள் இவரின் கருத்தினை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளன. ஆனால், பிரபஞ்சத்தில் கண்டுபிடிக்கப்படாத கிரகம் ஒன்று இருக்கலாம் என்ற கருத்தினை அந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. இதுவரை இனங்காணப்படாத இந்த கிரகத்திற்கு 'ப்ளெனட் எக்ஸ்' என அந்த நிறுவனங்களால் பெயரிடப்பட்டுள்ளது. **(-அ)**







உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions

the SUNDAY TIMES

விஜய்

DailyMirror

தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் ரவிக்கும் கமலுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

කමල්: රවි අයියේ! එන්න.
ரவி அய்யே! என்ன.
கமல்: **ரவி அண்ணா! வாருங்கள்.**

රවි: කමල් මල්ලි, අයියා ඉන්නවාද?
கமல் மல்லி, அய்யா இன்னவாத?
ரவி: **கமல் தம்பி, அண்ணா இருக்கிறாரா?**

කමල්: නැහැ අයියේ. අපේ අයියා නුවර මාමලගේ ගෙදර ගියා.
நெஹெ அய்யே. அப்பே அய்யா நுவர மாமலகே கெதர கியா.
கமல்: **இல்லை அண்ணா. எங்கள் அண்ணா கண்டி மாமா வீட்டுக்குப் போயுள்ளார்.**

: ඇයි හදිසියක් ද අයියේ?
எய் ஹதிசியக் த அய்யே?
: **ஏதும் அவசரமா அண்ணா?**

රවි: නැහැ මල්ලි. සෙනසුරාදාට තරුණ සමිතියේ රැස්වීම තියෙනවා.
நெஹெ மல்லி. செனசுராதாட்ட தருண சமிதியே ரெஸ்வீம தியெனவா.
ரவி: **இல்லை தம்பி. சனிக்கிழமை இளைஞர் சங்கத்தின் கூட்டம் உள்ளது.**

කමල්: අපේ අයියා හෙට එනවා.
அப்பே அய்யா ஹெட்ட எனவா.
கமல்: **எங்கள் அண்ணா நாளை வருவார்.**

රවි: ආ.. එහෙනම් අයියට පණිවිඩය කියන්න.
ஆ... எஹெனம் அய்யட்ட பணிவிடய கியன்ன.
ரவி: **ஆ... அப்படியானால் அண்ணாவுக்குத் தகவல் சொல்லுங்கள்.**

කමල්: රැස්වීම කොහේද තියෙන්නේ අයියේ?
ரெஸ்வீம கொஹேத தியென்னே அய்யே?
கமல்: **கூட்டம் எங்கே நடைபெறுகிறது அண்ணா?**

රවි: තරුණ සමිති ශාලාවේ.
தருண சமிதி ஷாலாவே.
ரவி: **இளைஞர் சங்க மண்டபத்தில்.**

කමල්: කීයට ද රැස්වීම පටන් ගන්නේ?
கீயட்ட த ரெஸ்வீம பட்டன் கன்னே?
கமல்: **எத்தனை மணிக்கு கூட்டம் தொடங்குகிறது?**

රවි: සවස හතරට.
சவச ஹதரட்ட.
ரவி: **பின்னேரம் நான்கு மணிக்கு.**

කමල්: හොඳයි අයියේ. මම කියන්නම්.
ஹொந்தய் அய்யே. மம கியன்னம்.
கமல்: **சரி அண்ணா. நான் சொல்கிறேன்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. அண்ணா நாளை வருவார்.
..............................................
2. கூட்டம் எங்கே நடைபெறுகிறது?
..............................................
3. பின்னேரம் நான்கு மணிக்கு.
..............................................




**Are எனும் நிகழ்கால துணை வினைச்சொல் வினா வாக்கியத்தில் கையாளப்படும் முறை**

அ) You are in the class now.
நீ இப்பொழுது வகுப்பில் இருக்கிறாய்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' நிலையில் உள்ள வாக்கியத்தில் காணப்படுகின்ற 'Are' எனும் துணை வினைச்சொல், அந்த வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறுகின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' நிலை வாக்கியமாகப் பின்வருமாறு மாற்றமடைகின்றது.

ஆ) Are you in the class now?
நீ இப்பொழுது வகுப்பில் இருக்கின்றாயா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ இவ்வாறே ஏனைய வாக்கியங்களையும் அவதானிப்போம்.

இ) You all are in the class now.
நீங்கள் அனைவரும் இப்பொழுது வகுப்பில் இருக்கிறீர்கள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஈ) Are you all in the class now?
நீங்கள் அனைவரும் வகுப்பில் இருக்கிறீர்களா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ மேலும் சில உதாரணங்கள்;

உ) You are a driver.
நீ ஒரு சாரதி.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஊ) Are you a driver?
நீ ஒரு சாரதியா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

**குறிப்பு:** மேற்படி உடன்பாடு (உ) வாக்கியத்திலும், வினா (ஊ) வாக்கியத்திலும் இடம்பெற்றுள்ள 'are' எனும் ஆங்கில வினைச்சொல்லுக்கு, தமிழில் தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வினைச்சொல்லானது, தமிழ் இலக்கண மரபின் பிரகாரம், 'தோன்றா வினை' என்றே கொள்ளப்படுகின்றது.

எ) They are in school now.
அவர்கள் இப்போது பாடசாலையில் இருக்கிறார்கள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)


ஏ) Are they in school now?
அவர்கள் இப்போது பாடசாலையில் இருக்கிறார்களா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

**குறிப்பு:** They- அவர்கள் (உயர்திணை)
They- அவை (அஃறிணை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் இலங்கை விஜயம்




இந்திய கிரிக்கெட் அணி அடுத்த ஜூலை மாதம் இலங்கை வரவுள்ளது. இலங்கை - இந்தியா அணிகளுக்கிடையே டெஸ்ட்-3, ஒருநாள்-5 மற்றும் T20-1 என போட்டிகள் நடைபெறவுள்ளன.

கால அட்டவணை

| டெஸ்ட் | |
|---|---|
| 1 ஆவது போட்டி | ஜூலை 26-30 வரை |
| 2 ஆவது போட்டி | ஓகஸ்ட் 04-08 வரை |
| 3 ஆவது போட்டி | ஓகஸ்ட் 12-16 வரை |

| ஒருநாள் | |
|---|---|
| 1 ஆவது போட்டி | ஓகஸ்ட் 20 |
| 2 ஆவது போட்டி | ஓகஸ்ட் 24 |
| 3 ஆவது போட்டி | ஓகஸ்ட் 27 |
| 4 ஆவது போட்டி | ஓகஸ்ட் 30 |
| 5 ஆவது போட்டி | செப்டெம்பர் 03 |
| T20 | செப்டெம்பர் 26 |




# ஒரே அணியில் மூன்று சகோதரர்கள்

சகோதரர்கள் மூன்று பேர் ஒரே ரகர் அணியில் சேர்க்கப்பட்டுள்ள அபூர்வ சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. ஈடன் பார்க் மைதானத்தில் நடைபெற்ற கழக மட்டத்திலான போட்டியொன்றின்போதே, நியூஸிலாந்தைச் சேர்ந்த மேற்படி மூன்று சகோதரர்களும் ஒரே அணியில் இடம்பெற்றிருந்தனர். பியுடென் பெரட், ஸ்கொட்பெரட், ஜோட் பெரட் ஆகிய சகோதரர்களே, இவ்வாறு ஒரே அணியில் இடம்பெற்றிருந்தவர்களாவார். இந்த அபூர்வ காட்சியைப் பார்ப்பதற்கென்றே ஏராளமான ரசிகர்கள் மேற்படி போட்டியை காண்பதற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சமூகசேவை புரியுமாறு கிரிக்கெட் வீரருக்கு நீதிமன்றம் தீர்ப்பு






நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டக் பிரேஸ் வல்ட் 100 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடவேண்டும் என நீதிமன்றமொன்று தண்டனை விதித்துள்ளது. மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தியமை உறுதியாகியதையடுத்தே, நீதிமன்றம் அவருக்கு இந்த தண்டனையை விதித்தது.


100 மணித்தியாலங்களுக்கு சமூக சேவையில் ஈடுபடவேண்டும் என்ற தண்டனை மட்டுமன்றி அவரது ஓட்டுனர் அனுமதிப் பத்திரமும் ஒரு வருட காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும், அவருக்கு எதிராக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை வெற்றிகொண்ட உளவியல் உபாயம்! பாகிஸ்தானின் வெற்றி



இம்முறை கிரிக்கெட் 2017 செம்பியன் கிண்ணத்தை பாகிஸ்தான் அணி கைப்பற்றி கிரிக்கெட் உலகையே ஆச்சரியப்பட வைத்துவிட்டது. இங்கிலாந்து, இந்தியா, நியூஸிலாந்து போன்ற அணிகளுக்கே கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு இருப்பதாக விமர்சகர்களால் எதிர்வுகூறப்பட்டது. இவை யாவும் தற்போது பொய்த்துவிட்டன. எவருமே எதிர்பாராத விதமாக பாகிஸ்தான் அணி செம்பியன் கிண்ணத்தை கைப்பற்றிவிட்டது.

பலம் பொருந்திய இந்திய அணியை புதிய இளம் வீரர்களைக் கொண்ட பாகிஸ்தான் அணி வெற்றிகொண்டது எவ்வாறு என்றே தற்போது பலவாறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்திய அணி பலம் பொருந்திய அணியாக கருதப்பட்டபோதிலும், அந்த அணியின் பலவீனங்கள் எவை என்பதை பாகிஸ்தான் அணி சரியாக கணித்ததன் பிரதிபலனே இந்த வெற்றியாகும்.



முதலில் துடுப்பெடுத்தாடிய தமது (பாகிஸ்தான்) அணி 300 ஓட்டங்களையும் தாண்டிய அதிகூடிய ஓட்டங்களை எடுப்பதன்மூலம், இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு உளவியல் ரீதியில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்த முடியும் என்ற உபாயத்தை பாகிஸ்தான் கையாண்டது. வெற்றி இலக்கு பெரிதாக இருப்பின் அந்த பதற்றத்திலேயே இந்திய துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்களை இழப்பர் என்பது கடந்த காலங்களில் பல போட்டிகளின்மூலம் இந்திய அணி நிரூபித்துள்ளது. இதனை சரிவர இனங்கண்டதாலேயே பாகிஸ்தான் அணியினர் இந்திய அணிக்கு உளவியல் நெருக்கடியை ஏற்படுத்தும் விதமாக 300 யும் தாண்டிய ஓட்ட எண்ணிக்கை பெற்றனர்.

அந்தவகையில், பாகிஸ்தானின் வியூகம் வீண் போகாதவாறு இந்திய அணியினரும் விக்கெட்களை அடுத்தடுத்து இழந்தனர். தலைவர் கோலியும்கூட, ஒரு பிடியெடுப்பில் தப்பித்தபோதிலும் தன்னை சுதாகரிக்கத் தவறியவராக அடுத்த பந்திலேயே மீண்டும் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்திய அணிக்கு பாண்டே தெம்பூட்ட முனைந்தபோதிலும், ஜடேஜா பாண்டேயை பலிக்கடாவாக்கி ஆட்டமிழக்கச் செய்தார். இதையும்விட, ஜடேஜா தனது விக்கெட்டை இழந்து பாண்டேயின் விக்கெட்டை காத்திருக்கலாம். எது எப்படியோ பாகிஸ்தான் பெற்ற 338 ஓட்டங்கள் இந்திய அணியை ஒரு குழந்தைத்தனமான அணியாக மாற்றிவிட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலைவனக் கதை

மிகக் குறைந்த மழைவீழ்ச்சியைப் பெறுகின்ற- வறட்சியான நிலப் பிரதேசமே 'பாலைவனம்' எனப்படுகின்றது. வறண்ட சூழலுக்கு தாக்குப்பிடித்து வாழக்கூடிய- இப்பிரதேசத்திற் கேயுரிய தனித்துவமான தாவரங்களையும் விலங்குகளையும் பாலைவனங்களில் காணலாம். உலக நிலப்பரப்பில் 20 சத வீதமான பகுதிகள் பாலைவனமாகவே காணப்படுகின்றன.

புவி வெப்பமடைவதன் காரணமாக, உலகில் பாலைவ னங்களின் எல்லைகள் மேலும் அகன்று செல்கின்றன. அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கு தேவையான உணவு உற்பத்தி பிரதேசங்களாகவும் தற்போதளவில் பாலைவனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால், பாலைவன சூழல் தொகுதியும் மாற்றமடைந்து வருகின்றது.

## பாலைவனச் சூழலின் தன்மைகள்

## பாலைவன வகைகள்

மழைவீழ்ச்சி, வெப்பநிலை, அமைந்துள்ள பகுதி போன்ற பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் பாலைவனங் கள் வகைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய; வெப்ப பாலைவ னம், குளிர் பாலைவனம், இடைவெப்ப பாலைவனம், கரையோர பாலைவனம் என பாலைவனங்களில் பல வகைகள் உள்ளன.

## பாலைவனத் தாவரங்கள்



பாலைவனத்தில் குறைந்தளவு தாவரங்களே வளர்கின்றன. வறண்ட சூழலுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய விதத்தில் தாவரங்களின் வளர்ச்சி காணப்படும். இவற்றின் வளர்ச்சிக்கு மிகக் குறைந்தளவு நீர் போதுமானது.



பாலைவனத் தாவரங்கள் இலை, தண்டு, வேர்கள் மூலம் நீரைச் சேகரிக்கின்றன. அதற்கேற்ப தகவமைப்பினை அவை பெற்றுள்ளன.





பாலைவனத் தாவரங்கள் பொதுவாக 'செரோஃபைட்ஸ்' (Xerophytes) எனப்படுகின்றன. 'வறட்சியை தாங்கும் தாவரங்கள்' என்பது இதன் அர்த்தமாகும்.



## பாலைவனக் காலநிலை

பருவகால அடிப்படையில் பாலைவனத்தில் வானிலையும் காலநிலையும் மாற்றமடையும். வெப்ப மற்றும் வறண்ட பாலைவனங்களில் கோடைகாலம் மிகவும் வெப்பமாக இருப்பதோடு, ஏனைய பருவகாலங்களில் மாறுதல் இல்லாத ஒரே விதமான வெப்பநிலை நிலவும். வெப்ப பாலைவனங்களில் குளிர் காலத்தில் சிறிதளவு மழைவீழ்ச்சி கிடைக்கும். அந்த மழை மிகக் குறுகிய நேரமே பெய்யும். அந்த நீரும் மிக விரைவாக ஆவியாகிவிடும்.





## பாலைவனச் சோலை




பாலைவனத்தில் நீர்நிலைகள் மற்றும் மரஞ்செடி, கொடிகள் உள்ள இடங்களை 'பாலைவனச் சோலை' என்பர். பாலைவனப் பகுதியூடாக, பல நாள் பயணங்களை மேற்கொள்வோர் தமது பயணத்தை தற்காலிகமாக நிறுத்தி ஓய்வெடுப்பதும், உணவு மற்றும் பானங்களை உட்கொள்வதும் இப்பகுதியிலேயே ஆகும். பொதுவாக, ஒரு பாலைவனத்தில் உள்ள சோலைவனத்தை சுற்றி நகரமொன்றோ அல்லது மக்கள் குடியிருப்புகளோ காணப்படும்.

## பாலைவன மனிதர்கள்




வெப்ப பாலைவனங்களில் பகல் வேளைகளில் அதிக வெப்பமும் இரவில் கடுங்குளிரும் நிலவுவதால், இத்தகைய பாலைவனங்களில் நாடோடிக் கோத்திரத்தாரே வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ல் வேளைகளில் ...திக வெப்பம் ...லவும் | இரவு வேளைகளில் கடுங்குளிர் நிலவும் | வருடாந்த மழைவீழ்ச்சி மிகவும் குறைவு | மணல் புயல் வீசும் |



## பாலைவன உயிரினங்கள்


பாலைவனங்களில் பல வகையான பாம்புகள், ஓணான்கள் வண்டுகள் உள்ளன. இவை தவிர; எறும்பு வகைகள், பறவைகள், ஆமைகள்கூட பாலைவனங்களில் வாழ்கின்றன. கைலா எனும் நச்சுப் பல்லி ஆபிரிக்க மற்றும் அரேபிய பாலைவனங்களில் வாழ்கின்றன. கங்காரு எலி, டிங்கோ எனும் பாலூட்டி நாய், பெல்லாஸ் பூனை என்பனவற்றையும் பாலைவனங்களில் காணலாம். கெசல் மான், டிக்டிக் மான், அடாக்ஸ் மான் மற்றும் எலான்ட் மான் போன்றவை பாலைவனங்களுக்கே உரிய மானினங்களாகும். குளிர் பாலைவனங்களில் வாழும் உயிரினங்கள் மிகவும் குறைவு. பொதுவாக, பாலைவன உயிரினங்கள் அடிக்கடி வெளியில் சுற்றித் திரிவதில்லை. அவை வெப்பம் மிகுந்த பகல் பொழுதில் பொந்துகள் அல்லது நிலத்தின்கீழ் இருப்பதோடு, இரவு வேளைகளில் மாத்திரம் வெளியே வந்து உணவு தேடிக்கொள்ளும்.

## மணல் புயல்





பாலைவனமெங்கும் மணல் மலைகளைக் காணலாம். பாலைவனத்தில் தொடர்ச்சியாக வீசும் காற்றின் மூலம் இங்கிருக்கும் மணல் மற்றும் தூசுகள் அடித்துச் செல்லப்படும். பலமாக வீசும் காற்றினால் மேலெழும் மணல் துணிக்கைகள் நாடெங்கிலும் பரவக்கூடிய சாத்தியம் உள்ளது. இதுவே 'மணல் புயல்' எனப்படுகின்றது.

தின்



## பாலைவனக் கப்பல்

'பாலைவனக் கப்பல்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் உயிரினம் தான் ஒட்டகம் ஆகும். பாலைவனத்தில் இலகுவாகப் பயணிக்க ஏற்ற விதத்தில் ஒட்டகத்தின் பாதங்களும் குளம்புகளும் அமைந்துள்ளன. மேலும், ஒட்டகம் தனது திமிலினுள் நீரை களஞ்சியப்படுத்திக்கொள்ளும். இதன் உடல் வியர்வையை வெளியேற்றுவதில்லை. இதனால், உடலில் இருந்து நீர் வெளியேறுவது குறைவாகும்.



## உலகின் முக்கிய பாலைவனங்கள்

### அட்டகாமா பாலைவனம்



உலகிலேயே அதிக வெப்பமான பாலைவனம் இதுவாகும். தென் அமெரிக்காவின் அந்தீஸ் மலைத்தொடருக்கு மேற்கே, பசுபிக் கரையோர வலயத்திற்கு சமாந்தரமாக அமைந்துள்ளது. இங்கு வருடத்திற்கு 15 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே பதிவாகின்றது.

### தார் பாலைவனம்




இந்தியாவில் அமைந்துள்ள இந்த பாலைவனத்தை 'மகா இந்திய பாலைவனம்' என்றும் அழைப்பர். இது 250,000 ச.கி.மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இந்தியாவின் ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், குஜராத் ஆகிய மாநிலங்களில் இது பரவியுள்ளது.

### சஹாரா பாலைவனம்




ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள உலகின் மிக முக்கியமானதும் மிகப் பெரியதுமான பாலைவனமாகும். உலகின் அதிவெப்ப பாலைவனங்களில் இதுவும் ஒன்று.

### அரிசோனா பாலைவனம்



ஐக்கிய அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தின் தென் பகுதியில் இந்த பாலைவனம் அமைந்துள்ளது. இங்கு ஆங்காங்கே தனி மலைக்குன்றுகள் காணப்படுகின்றன. இப்பாலைவனத்தை ஊடறுத்து கொலராடோ நதி பாய்கின்றது.

## ஜூன் 17 பாலைவனமாக்கல் தடுப்பு மற்றும் வறட்சி ஒழிப்பு தினம்



ஐக்கிய நாடுகள் சபையானது, ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 17 ஆம் திகதியை பாலைவனமாக்கல் தடுப்பு மற்றும் வறட்சி ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த தினத்தில் காலநிலை மாற்றம் குறித்து உலக மக்களை விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பாலைவனமாக்கல் தடுப்பு மற்றும் வறட்சியை ஒழிப்பதற்காக மக்களை ஒன்று திரட்டுவதே இதன் நோக்கமாகும்.

## பாலைவன சுற்றுலாக் கைத்தொழில்



பாலைவனத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் சுற்றுலா செயற்பாடுகள் இன்றளவில் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. மணல் அதிகமுள்ள நிலத்தில் வாகன ஓட்டம், மணல் மலைகளை காண்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல், ஒட்டகங்களில் ஏறி பாலைவனத்தில் பயணித்தல் போன்றவை சுற்றுலாப்பயணிகளை கவர்ந்துள்ள விடயங்களாகும்.

### கிரேட் விக்டோரியா பாலைவனம்



அவுஸ்திரேலியாவின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாலைவனம், அந்நாட்டின் மிகப் பெரிய பாலைவனமாகும். இதனை அண்டிய பகுதிகளில் பல ஆதிக்குடிகள் வாழ்கின்றன.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான உற்பத்தி வளர்ச்சிகள்...

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் சர்வதேச பயணிகள் போக்குவரத்து விமான உற்பத்தித்துறையில் புதிய அத்தியாயத்தில் கால் பதித்துள்ளன. அதன்படி சீனா தனது நாட்டில் உற்பத்தி செய்த C919 பயணிகள் போக்குவரத்து விமானத்தின் கன்னிப் பயணத்தை அண்மையில் மேற்கொண்டதோடு, ரஷ்யாவின் 'MC21' எனும் முதலாவது பயணிகள் விமானத்தின் வெள்ளோட்டமும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இதனால், உலகின் பயணிகள் விமான உற்பத்தியில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்த இரு பெரும் நிறுவனங்களாகிய அமெரிக்காவின் 'போயிங்' நிறுவனமும் ஐரோப்பாவின் 'எயார்பஸ்' நிறுவனமும் நெருக்கடிகளைச் சந்தித்திருப்பதாக கூறப்படுகின்றது.

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் மேலதிகமாக ஜப்பானும் கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தமது நாட்டில் தயாரிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து ஜெட் விமானமொன்றை வெள்ளோட்டம் விட்டது. MRJ (Mitsubishi Regional Jet) என அழைக்கப்படும் அதன் தயாரிப்பாளர் ஜப்பானின் மிட்சுபிஷி நிறுவனமாகும்.

இந்த புத்தம் புதிய விமானங்களிடையே C919 வகை விமானமானது, அண்மையில் அந்நாட்டின் ஷெங்ஹைய் நகரின் புடோன்க் சர்வதேச விமான நிலையத்தில் தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது. அத்துடன், தற்பொழுது உலகின் விமானத் தயாரிப்பில் ஈடுபடும் ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, பிரேசில், கனடா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி என்பவற்றுடன் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிய நாடுகளாக சீனாவும் ஜப்பானும் புதிதாக இணைந்துள்ளன.

இந்த Comac C919 விமானமானது, பயணிகள் போக்குவரத்திற்காக உத்தியோக பூர்வமாக பயன்படுத்த மேலும் சில வருடங்கள் எடுக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் ரஷ்ய உற்பத்தியாகிய 'MC-21' ஜெட் விமானம் மிக விரைவில் தனது கன்னிப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. தற்பொழுது விமானத்தின் அனைத்து வேலைகளும் பூர்த்தியாகிவிட்டன. இரட்டை இயந்திரத்துடன் கூடிய இந்த விமானத்திற்கு குறுகிய மற்றும் இடைநிலை தூரத்திற்கு பயணிக்கும் ஆற்றல் உள்ளது. அத்தோடு, இந்த விமானத்தில் பயணிக்கக் கூடிய பயணிகளின் தொகை 150-212 க்கும் இடைப்பட்டதாகும். இவ்விமானம் மணிக்கு 870 கி.மீற்றர் வேகத்தைக் கொண்டது.

ரஷ்யாவின் மிகப் பெரிய விமான நிறுவனமாகிய ஏராஃப்லொட் இப்பொழுதே இந்த MC-21 வகையைச் சேர்ந்த பல விமானங்களை வாங்குவதற்கு கோரிக்கை விடுத்துள்ளது. அதன்படி 2018 ஆம் ஆண்டு இறுதி அரைப் பகுதியிலோ அல்லது 2019 ஆம் ஆண்டு ஆரம்பத்திலோ இத்தகைய 50 விமானங்களை அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு யுனைட்டட் எயார்க்ராஃப்ட் கோப்பரேஷன் கூட்டு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

## C919

சீனாவின் கொமர்ஷல் எயார் க்ராஃப்ட் கோப்பரேஷன் ஓஃப் சைனா (Comac) நிறுவனத்தின் ஒரு தயாரிப்பாகிய மிகப் பெரிய விமானமாகும்.


இந்நிறுவனம் சீனாவின் ஷெங்கை நகரில் அமைந்துள்ளது.





2017 ஏப்ரல் 14 ஆம் நாள் முதன்முதலாக இந்த C919 விமானம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் பயணம் மே 05 இல் நிகழ்ந்தது.

விமானத்தின் நீளம், உயரம், அகலம் மீற்றர் அளவையில்




உச்சவேகம் (மெச்) **0.76** 0.76 ஒலி வேகத்தில்

மேலே உயர்த்தக்கூடிய உச்ச உயரம் **12,100** மீற்றர்


பயணிக்கக்கூடிய பயணிகள் **168**

பயணிக்கக்கூடிய தூரம் **5,555** கி.மீற்றர்

**15%** குறைவான எரிபொருள் பாவனை | **10%** செலவைக் குறைக்கும் | **50%** காபன் குறைத்தல்

அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தின் 737-800 மற்றும் பிரான்சின் எயார் பஸ் நிறுவனம் 320 இன் அளவுகள்


## Boeing 737-800




வேகம் (மெச்) **0.74** | மேலே உயர்த்தக் கூடிய உச்ச உயரம் மீற்றர் **12,500** | மொத்தப் பயணிகள் **210**

பறக்கக்கூடிய உச்ச தூரம் கி.மீற்றர் **5,665**

## Airbus A320




வேகம் (மெச்) **0.74** | மேலே உயர்த்தக் கூடிய உச்ச உயரம் மீற்றர் **12,500**


பறக்கக்கூடிய உச்ச தூரம் கி.மீற்றர் **5,700** | பயணிக்கக் கூடியோர் தொகை **210**

## MC 21

ரஷ்யாவின் கிர்குட் கோப்பரேஷன் (Irkut Corporation) நிறுவனத்தின் தயாரிப்பு




MC21-200 மற்றும் MC21-300 என இரு மாதிரி வகைகள்




MC21-300 விமானத்தின் நீளம், உயரம் மற்றும் அகலம் மீற்றர் அளவையில்

உச்ச வேகம் (மெச்) **0.76**

விமானத்தில் ஏற்றக்கூடிய உச்ச நிறை கி.கிராம் **79,250**

பயணிக்கக்கூடிய பயணிகள் **211**

பறக்கக்கூடிய உச்ச தூரம் **6,000** கி.மீற்றர்

**03** எயார் பஸ் மற்றும் போயிங் விமானங்களுக்கு நிகராக இந்த விமானம் வருடமொன்றுக்கு சேமிக்கும் தொகை 03 மில்லியன் அமெரிக்கன் டொலர்

**175+** இப்பொழுது கிடைக்கப்பட்டுள்ள விமான மனுக்கோரல்





2016 ஜூன் 08 ஆம் திகதி இந்த MC21 விமானம் குறித்து முதன்முதலாக இர்குட் கோப்பரேஷனில் வெளிப்படுத்தப் பட்டது.

## MRJ (Mitsubishi Regional Jet)

இந்த விமானம் 'மிட்சுபிஷி' நிறுவனத்தின் தயாரிப்பாகும்.

விமானத்தின் நீளம், உயரம் மற்றும் அகலம் மீற்றர் அளவையில்.




வேகம் (மெச்) ஒலி வேகம் **0.78** | மேலே உயர்த்தக்கூடிய உச்ச உயரம் மீற்றர் **11,900** | பயணிக்கக் கூடிய பயணிகள் **70-90**




2015 நொவெம்பர் மாதத்தில் தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்டது.

- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலை மற்றும் கலாசாரம் வீடியோ படைப்புகள்

ஊடக அனுசரணை: விஜய்

**பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனைத் திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான கலை மற்றும் கலாசாரம் சார்ந்த வீடியோ படைப்புகள் தொடர்பான தெரிவுப் போட்டி.....**

சிறிது சிறிதாக அருகிப்போகும் சமூக கலாசார விழுமியங்களை சிறுவர்களுக்கு தெளிவுப்படுத்துதல் மற்றும் எமது அறநெறி, மனித பார்வை, ஏனைய கலாசாரத்திற்கு கௌரவமளித்தல், மத நம்பிக்கைகளை ஏற்படுத்துதல், என்பன இதன் முக்கிய கருப் பொருளாகும். அதன்படி மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு ஏற்றவாறு 03 தொடக்கம் 05 நிமிடங்களுக்குள் வீடியோப் படைப்பு ஒன்றை தயாரித்து மேற்படி போட்டிக்கு சமர்ப்பிக்க முடியும்.



இந்தப் போட்டி மாவட்டம் மற்றும் தேசிய மட்டங்களில் 02 கட்டங்களாக நடைபெறும். மாவட்ட மட்டத்தில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங் களைப் பெறும் வெற்றியாளர்களின் படைப்பு களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் படுவதுடன், விசேட திறமையைக் காட்டும் வீடியோ தயாரிப்பாளர்களுக்கு திறமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தேசிய மட்டப் போட்டிக்காக 25 மாவட்டங்களிலி ருந்தும் தலா சிறந்த ஒரு படைப்பு வீதம் 25 படைப்புக்கள் தெரிவு செய்யப்படும். மேற்படி படைப்புக்கள் அடங்கிய DVD இறுவட்டு விமர்சையாக வெளியிட்டு வைக்கப்படும்.

## நிபந்தனைகள்

I. இந்தப் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் நடைபெறும் என்பதுடன், ஒரு மாணவருக்கு ஒரு போட்டியில் மாத்திரமே பங்குபற்றமுடியும்..

II. விண்ணப்பப்படிவம் மற்றும் ஆக்கம் அடங்கிய CD என்பன பாதுகாப்பாக எமக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

III. குறுந் திரைப்படம் 03 நிமிடங்கள் தொடக்கம் 05 நிமிடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. 2017 ஜூலை 25 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து ஆக்கங்களும் பாடசாலைக்கு அருகில் உள்ள பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ பணியாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் கையளித்தல் வேண்டும்



## இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டம்

**குறுந் திரைப்பட போட்டிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துகளுடன் பெயர்: ........................................
2. பாடசாலை: ........................................
3. பாடசாலை முகவரி: ........................................
........................................
4. தொலைபேசி:
பாடசாலை: ........................ வீடு: ........................
5. மாவட்டம்: ........................................
6. பிரதேச செயலகம்: ........................................
7. படைப்பின் காலம் (நிமிடம்): ........................................

மேற்குறிப்பிட்ட விடயங்கள் உண்மையெனவும் சரியானதெனவும் இங்கு சமர்ப்பிக்கப்பட்ட படைப்பு என்னால் தயாரிக்கப்பட்ட படைப்பு என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

பெயர்: ........................................

கையொப்பம்: ........................

மேல் பெயர் குறிப்பிட்ட மாணவன்/ மாணவி........................ ........................ பாடசாலையில் ........................ தரத்தில் கல்வி கற்பவர் என்பதுடன், இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறுந் திரைப்பட ஆக்கம் மாணவன்/மாணவியினது சுய படைப்பு என்பதுடன், மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையெனவும் மற்றும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

வகுப்பு ஆசிரியரின் பெயர்: ........................................

ஒப்பம்: ........................

போட்டி விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

........................ ........................
(அதிபரின் கையொப்பம்) (திகதி)
(அதிபரின் பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ் பல தீவுகளைக் கொண்டதோர் நாடாகும். 16 ஆம் நூற்றாண்டில் அந்நாடு ஸ்பானியரின் ஆட்சியின்கீழ் வந்தது. பின் அமெரிக்கா அந்நாட்டை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தது. 1935 இல் அந்நாட்டில் சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைக்கப்பட்டது. பின்னர் ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டதுடன், 1946 ஜூலை 04 ஆம் திகதி தொடக்கம் பிலிப்பைன்ஸில் குடியாட்சி நிலவுகின்றது.







# எமது உலகம்
## சிறுவர் கதை நூல் ஆக்கம்

ஊடக அனுசரணை: விஜய்

பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த சிறுவர் கதை நூலுக்கான தெரிவுப் போட்டி.....



### போட்டி விதிமுறைகள்:

மாவட்ட மட்டத்தில் பாலர், கனிஷ்ட, சிரேஷ்ட ஆகிய 03 பிரிவுகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித் தனியாக போட்டிகள் நடாத்தப்படும். மேற்குறித்த பிரிவுகளில் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்கள் தெரிவுசெய்யப்படும். மேலும், மாவட்ட மட்டத்தில் விசேட திறமை காண்பிக்கும் ஆக்கத்தினை தெரிவுசெய்து அதற்கு சான்றிதழ் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தினை பெறும் படைப்பு தேசிய மட்டப் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும்.

அது தவிர, மாவட்ட மட்டத்தில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படும் சிறுவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டு அவர்களின் படைப்பாற்றலை மேலும் விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெறும். தேசிய மட்டப் போட்டிக்கென தெரிவாகும் 25 மாவட்டங்களையும் சேர்ந்த படைப்புக்கள் நூல் வடிவில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு, 2017 ஒக்டோபர் 01 ஆம் திகதியன்று உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நூலினை கல்வி அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றினால் வெளியிட்டு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.



### போட்டி நிபந்தனைகள்:

i. அனைத்து சிறுவர் நூல்களும் 16 பக்கத்திற்கு மேலாக இருத்தல் வேண்டும். (ஒரு பக்கத்தின் அளவு A4 அளவாக இருத்தல் வேண்டும்)
ii. போட்டியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
iii. சமர்ப்பிக்கப்படும் போட்டிப் பிரிவுகளின் வயதெல்லை
 * பாலர் பிரிவு (தரம்-1 தொடக்கம் தரம்-5வரை)
 * கனிஷ்ட பிரிவு (தரம்-6 தொடக்கம் தரம்-9 வரை)
 * சிரேஷ்ட பிரிவு (தரம்-10 தொடக்கம் தரம்-13 வரை)
iv. தேசிய அல்லது சர்வதேச நூல்களை மொழிபெயர்த்தல், தழுவல் அல்லது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பிரதிபண்ணல் கூடாது.
v. சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெவ்வேறாக போட்டிகள் நடாத்தப்படும்.
vi. படைப்புக்கள் உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் உள்ள கலாசார உத்தியோகத்தரிடம் கையளித்தல் வேண்டும்.

**போட்டி முடிவு திகதி 2017 ஜூலை 25**

## இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டம்

### சிறுவர் கதை ஆக்கம் - மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துகளுடன் பெயர்: ..........
2. பாடசாலை: ..........
3. பாடசாலை முகவரி: ..........
   ..........
4. தொலைபேசி:
   பாடசாலை: .......... வீடு: ..........
5. மாவட்டம்: ..........
6. பிரதேச செயலக பிரிவு: ..........
7. படைப்பு சமர்ப்பிக்கப்படும் மொழி: ..........
8. சமர்ப்பிக்கப்படும் போட்டிப் பிரிவு
   (பாலர்/ கனிஷ்ட/ சிரேஷ்ட) ..........
   பெயர் .......... தரம்..........
   கதையாக்கம்..........
   கையொப்பம்: ..........

மேற்குறிப்பிட்ட இந்த விண்ணப்பப்படிவத்துடன், சமர்ப்பிக்கப்பட்ட சிறுவர் கதைப் படைப்பு .......... மாணவன்/ மாணவியுடையது என்பதுடன், மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையெனவும் மற்றும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

வகுப்பு ஆசிரியரின் பெயர்: ..........

ஒப்பம்: .......... திகதி: ..........

போட்டி விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

.......... ..........
(அதிபரின் கையொப்பம்) (திகதி)
(அதிபரின் பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்

வியட்நாமின் தலைநகர் எது?
**ஹனோய்**



உலகப் புகழ்பெற்ற The Fairy Tale என்ற சிறுவர் இலக்கியத்தை எழுதியவர் யார்?
**கிறிஸ்டியன் அண்டர்சன்**



பிரான்ஸ் நாட்டின் அரசியல் வரலாற்றில் குறைந்த வயதில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
**இமானுவெல் மக்ரோன்**





உலகின் மிகப் பெரிய அரச நிர்வாக அலுவலகக் கட்டடம் எது? அது எந்த நாட்டில் அமைந்துள்ளது?
**பென்டகன், ஐக்கிய அமெரிக்காவில்**

கற்பூரம் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது?
**குடாப்புன்னை என்ற மரத்தில் இருந்து பெறப்படுகின்ற எண்ணெயில் இருந்து உருவாக்கப்படுகின்றது**



தொகுப்பு: உருவை பரந்தாமன்

**கேள்வி: மலைகள் சார்ந்த பகுதிகளில் மண்சரிவுகள் மழைக்கு பின்னர் நிகழ்வது எப்படி?**

**பதில்:** கடும் மழையின் போது தரையில் விழும் நீரின் அளவு அதிகமாக இருக்கும். மலையிலுள்ள மண்ணானது நெகிழும் தன்மை கொண்டிருப்பின் மழை நீருடன் அந்த மண் கழுவப்பட்டு கீழ் நோக்கி விழும் போது கீழ் மட்டங்களில் அதிக அழுத்தம் அதிகரிப்பதனால் தாழ்வான பகுதிகளில் மண் கழன்று விழுகின்றது. இதன் காரணமாக, மலையின் மேற்பகுதியில் இறுக்கம் குறைந்து முழு மலைப் பகுதியும் சரிந்து விழுந்து மண் சரிவு ஏற்படுகின்றது.

நீண்ட காலமாக நன்கு உறுதியாக இருந்த மண் இவ்வாறு நெகிழ்வடைவதற்கு பிரதான காரணியாக மலையின் மேற்பகுதியில் உள்ள பெரும் மரங்கள் வெட்டி அகற்றப்படுவதனைக் குறிப்பிடலாம். இதனால் இந்த பெரும் மரங்களின் நிழலில் வளரும் இதர தாவரங்களும் அழிகின்றன. இந்த அனைத்து தாவரங்களின் வேர்களினால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருந்த மண்ணானது, வேர்கள் இறந்த பின்னர் நெகிழ்வடைய ஆரம்பிக்கின்றன. இதுவே மண் சரிவிற்கு முக்கிய காரணமாகின்றது.

எப்படி?



**கேள்வி: காசநோய் மற்றும் மேலும் பல நோய்களுக்கு எவ்வளவு தான் மருந்துகள் இருந்தாலும் உலகத்தில் இருந்து இந்த நோய்களை முற்றாக ஒழிக்க முடியாதிருப்பது ஏன்?**

**பதில்:** எமது உடலுக்குள் இந்த நோய்களை ஏற்படுத்தும் நுண்ணங்கிகள் உட்சென்று சுரப்புகளை உருவாக்குவதனால் தான் இவ்வாறான நோய்கள் ஏற்படுகின்றன. இந்த சுரப்புகள் எமது உடற் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை விளைவித்து நோய் அறிகுறிகளை ஏற்படுத்துகின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எமது உடலில் வெள்ளை அணுக்கள் இந்த நுண்ணங்கிகளுடன் போராடி அவற்றை அழித்து விடுகின்றன. எனினும் காலப்போக்கில் நுண்ணங்கிகளின் கலங்களில் உள்ள அமிலங்களில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக, நுண்ணங்கிகள் அழியாமல் மீண்டும் பெருக ஆரம்பிக்கின்றன. எனினும் பலதரப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்துகள் ஊசி மூலமும் மருந்துகள் மூலமும் உடலுக்குள் செலுத்தப்படுவதனால் நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனினும் இறக்காமல் இருக்கும் நுண்ணங்கிகள் மருந்துகளை எதிர்த்து மென்மேலும் தீவிரமடைந்து நோயை பரப்புவதாலேயே அவற்றை முற்றாக ஒழிக்க முடியாதுள்ளது.

ஏன்?



## கண்ணாடித் தவளை

தவளை இனங்களில், கண்ணாடித் தவளைகள் என்ற இனம் ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதன் முதுகுப் பகுதியில் பச்சைப் புள்ளிகள் கொண்ட தோல் மூடியிருக்கிறது. மொத்தம், 2 செ.மீ., நீளமே உள்ள இந்த தவளைகள், பெரும்பாலும் இலைக்கு அடியிலேயே வாழ்கின்றன. இவ்வாறு இலைகளின் அடியில் இருக்கும்போது, இதன் கண்ணாடி போன்ற உடலின் ஊடே, இலைகளே பிரதிபலிப்பதால் மிகச்சிறப்பாக உரு மறைப்புச் செய்கின்றது. எனவே தான், இத்தனை காலங்கள் ஆராய்ச்சியாளர்களால் இதனை கண்டுபிடிக்க முடியாது போயுள்ளது.

இவற்றின் வயிற்றுப் பகுதிக்குள் இருக்கும் அனைத்து உறுப்புக்களும் வெளியே தெரியக்கூடியதாக இருப்பதால்தான் இவற்றுக்கு கண்ணாடித் தவளை என்று பெயர்சூட்டப்பட்டுள்ளது. இந்த தவளைகள் பெரும்பாலும் அமேசனின் ஈக்வடோர் வனப் பகுதியில் வாழ்வதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த தவளையின் இதயம் துடிப்பதைக்கூட நம்மால் பார்க்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர நூலகம்



**'xylotheque'** என்பது, மரங்கள் தொடர்பான தகவல் களஞ்சியத்தைக் குறிக்கும். இதுவொரு கிரேக்க மொழிச் சொல்லாகும். கிரேக்க மொழியில் 'xylo' என்றால் தமிழில் 'மரம்' என்றும், 'theque' என்றால் 'களஞ்சியம்' என்றும் அர்த்தப்படுகின்றது. இங்கு மரத்தினால் புத்தக வடிவ பெட்டிகள் செய்து அந்தப் பெட்டிகளுக்குள் அந்தந்த மரத்தின் இலை, பூ, காய், கனி, விதை, மரப்பட்டை, வேர் போன்ற மாதிரிகள் சேகரித்து வைக்கப்படுகின்றன.

அத்துடன், குறித்த மரத்தின் பெயர், அது தொடர்பான குறிப்புகள், அந்த மரத்தை ஏதாவது நோய் தாக்கியிருக்கின்றதா? போன்ற விபரங்களும் இந்தப் பெட்டிகளுக்குள் எழுதி வைக்கப்பட்டிருக்கும். இந்த மரப் பெட்டிகள் அனைத்தையும் மர அலுமாரிகளில் அடுக்கி வைத்திருப்பர். இந்த முறையானது, நூலகங்களில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள முறையை ஒத்ததாகவே காணப்படுகின்றது. எனவே, இதனை 'மர நூலகம்' என்றும் குறிப்பிடுவர். அந்தவகையில், ஐக்கிய அமெரிக்காவின் வன சேவையின்கீழ் இயங்கும் வன தயாரிப்பு ஆய்வகத்தில் சுமார் 60 ஆயிரம் மரங்கள் பற்றிய தகவல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கீரைகளை உணவில் சேர்ப்போம்

தினமும் ஒரு கீரை வகையை உணவில் சேர்த்துக்கொள்வது ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்தது என உணவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். கீரைகளில் அதிக சத்துக்கள் அடங்கியுள்ளன. இவை உடல் வளர்ச்சிக்கும் சிறந்த கண் பார்வைக்கும் உதவுகின்றன. கீரைகளில் இரும்புச்சத்தும் தாதுப்பொருட்களும் அதிகம். இரும்புச்சத்தானது, குருதிச்சோகை ஏற்படுவதை தடுக்கின்றது.

அத்துடன், இவற்றில் சுண்ணாம்புச்சத்து, பீட்டா கெரொடீன், விற்றமின் A,C போன்றவையும் அதிகம் அடங்கியுள்ளன. ஆனால், இந்த சத்துக்கள் அனைத்தும் எமது உடலுக்கு கிடைக்க வேண்டுமாயின் கீரைகளை நீண்ட நேரம் சமைப்பதை தவிர்க்க வேண்டும்.



# எரிசக்தி சேமிப்பு

இன்றைய உலகில் எரிசக்தி பயன்பாடு மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால், எதிர்காலத்தில் எரிசக்தி வளப் பற்றாக்குறை ஏற்படும் என்று கூறப்படுகின்றது. நிலக்கரி, பெற்றோலியம், இயற்கை எரிவாயு ஆகியவை அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற எரிசக்தி வளங்களாக உள்ளன. இவை மீளப் புதுப்பிக்க முடியாத வளங்களாகும். இந்த வளங்கள் உருவாவதற்கு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் எடுக்கின்றன.




எனவே, எரிசக்தி வளங்களை சேமிப்பது காலத்தின் தேவையாகும். எரிசக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் எரிசக்தி வளங்களை சேமிக்கலாம். இதனால், சூழல் மாசடைகின்ற அளவும் குறைகின்றது. எமது பணமும் சேமிக்கப்படுகின்றது.

# நிலநடுக்கத்தைத் தாங்கும் வீடுகள்



நிலநடுக்கத்தைத் தாங்கக்கூடிய வகையிலான 'ஸ்டைரோஃபோம்' (Styrofoam) வீடுகள் ஜப்பானில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. குறுகிய பாவனைக்கு உதவும் ஸ்டைரோஃபோம் தட்டுகள், உணவுப்பெட்டிகள், குவளைகள் பற்றியே நாம் இதுவரை அறிந்திருக்கின்றோம். ஆனால், ஸ்டைரோஃபோமினால் வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றது என்பது ஆச்சரியமான விடயமாகும்.

தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட ஸ்டைரோஃபோமைப் பயன்படுத்தியே, இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஸ்டைரோஃபோம் வீடுகள் நிலநடுக்கத்தை தாங்கக்கூடிய வகையில் அரைக்கோள வடிவில் நிர்மாணிக்கப்படுகின்றன. இவை வெப்பத்தைக் கட்டுப்படுத்தக்கூடியவை. இதனால், வீட்டினுள் எப்போதும் குளிர்ச்சி நிலவும். தற்போது ஜப்பானில் இந்த வீடுகள் மிகவும் பிரபலமாகி வருகின்றன.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, ஜூன் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No.8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 28 , 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org